Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.175 /2025 Date:09.07.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW8)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரவி | Village | கூடலூர் வடக்கு |
| Father/ Husband Name | பெருமாள் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 59/2026 | Calling | சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 09.07.2026. TIME 12.25 AM/ **PM**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

**சாட்சி பிஎன்எஸ்எஸ் பிரிவு 348ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் தற்போது கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மற்றும் வழக்கின் மேல் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் கிருஷ்ணகுமார் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் எனக்கு பரீட்சியம் ஆகும் என்பதாலும் ஆவணங்களை பார்த்து என்னால் சாட்சியம் அளிக்க இயலும். 07.08.2024ம் தேதி 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது நிலையத்தில் ஆஜராகி சுப்பிரமணி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 296(b), 115(2), 118(2), 351(3) BNS இதச கீழ் குற்ற எண் 172/24 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், பின்னர் அன்றைய தினமே 20.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் வீரணன், பிரபு ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் தனிதனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் விமல் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றார். வழக்கு விசாரணை முடித்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது வழக்கு பதிவு செய்த பிரிவு படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். புகார் **அ.சா.ஆ.2**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**, வரைபடம் **அ.சா.ஆ.5**, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ. 6** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த சந்தேகத்தின் பேரிலான புகாரினை சரியாக விசாரணை செய்யாமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.